கோரிக்கை எண் 52

திருவாளர்கள் சு. பாலன், தி. கா. நல்லப்பன், ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் இல. பலராமன், டி. மணி, பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண் 52, சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,95,08,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 2–4–1981 ஆம் தேதி காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்,

244. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு பண்டகச்சாலைச் சட்டத்தின் விவர அட்டவணையில் (1) ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடுகள் (2) பாலிதின் மணிகள் (3) Alpha Meal (கோழித் தீவனம்) போன்ற பண்டங்களைச் சேர்ப்பது தொடர்பாகவும் சேமிப்புக் கட்டணங்களை நிர்ணயிப்பது குறித்தும் விதிகளை உருவாக்குவது தொடர்பாக உணவுத் துறையின் 19–7–1980 ஆம் தேதியிடப்பெற்ற 171 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு பண்டகசாலைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1951) 27(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1 981 ஏப்ரல் 1]

245. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் 1966–67 மற்றும் 1967–68 மற்றும் 1968–69 முதல் 1970–71ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டுக் கணக்குகள் (ஆங்கிலம்) (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் (தமிழ் நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[ஆ] அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

100. சட்ட விதிகள் ஆய்வு குழுவின் முதல் அறிக்கை (ஆங்கிலம்).

101. 1980–81 ஆம் ஆண்டிற்கான அரசினர் உறுதி மொழிக் குழுவின் முதல் அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS